RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s624

OPEN ACCESS

# பெயரறியப்படாத சங்கப்புலவர்களின் பாடல்களில் பண்பாட்டுப் பதிவுகள்

**தெ. சந்திரா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி-628008, தமிழ்நாடு, இந்தியா.

# Cultural Inscriptions in the Hymns of Anonymous Sangam Poets

**T. Chandra** [a, *]

[a] Department of Tamil, V.O. Chidambaram College, Thoothukudi–628008, Tamil Nadu, India

* Corresponding Author: pearl4god@gmail.com

Received: 05-10-2021
Revised: 01-05-2022
Accepted: 16-05-2022
Published: 18-07-2022

**ABSTRACT**

Among the languages of the world, Tamil is hailed as the supreme classical language. Tamil is an ancient, classical, and prosperous language. Literature is one factor that enriches the language. In the Sangam society, which was centred on human life, honour for men and chastity for women became ornaments. People lived a cultured life where they lived and let others live. They accepted married life in the community wholeheartedly. Hospitality was prized as the chief virtue. The author names of many hymns are unknown in the Sangam literature, 'Ettuthogai', which is such a cultural treasury and primary literature. This research explores the richness of cultural richness, lifestyles, and beliefs found in the songs of anonymous poets.

**Keywords:** Sangam society, Anonymous Poets Ettuthogai, Sangam Poets

## முன்னுரை

இலக்கியம் வாழ்க்கையோடு இயைந்தது. மனித வாழ்வின் அனுபவங்களையும், பண்பாட்டையும் பிரதிபலிப்பது. பண்பட்ட மனித வாழ்வியலை எடுத்துரைக்கும் பண்பாட்டுப் பெட்டகம் சங்க இலக்கியமாகும். மனிதன் கூடி வாழும் ஒழுங்குமுறையே சமுதாயம் எனப்படும். தமிழர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து உருவாக்கிய பழக்கவழக்கங்களும், மரபுகளும் சேர்ந்தப் பண்பாட்டினை எட்டுத்தொகையுள் பெயரறியப்படாத புலவர்களின் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன (Aravanan, 2003; Ramakrishnan, 2010). அப்பாடல்களின் வழியாகத் தமிழர்களின் நாகரிகம், பண்பாடு, இல்லற வாழ்வியல், விருந்தோம்பல், ஈகைக் குணம், தமிழர்களின் வீரம், பொருள் தேடும் வாழ்க்கை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்ற பண்பாட்டு விழுமியங்களை ஆராய்வதாக இவ்வாய்வு விளங்குகின்றது.

## பெயரறியப்படாதப் புலவர்கள்

சங்கப் பாடல்கள் அகம், புறம் என்ற பாகுபாட்டால் அமைந்தன. சங்க இலக்கியத் தனிப்பாடல்களின் தொகை 2381. எட்டுத்தொகையுள் பெயரறியப்படாதப் புலவர்களின் பாடல்கள் 83 ஆகும். அவற்றுள் அகம் பற்றியன 69 பாடல்கள். புறம் பற்றியன 14 பாடல்கள். நற்றிணையில் 56 பாடல்களும், குறுந்தொகையில் 10 பாடல்களும், அகநானூற்றில் 3 பாடல்களும் அகப்பாடல்களாகும். புறநானூற்றில் 14 பாடல்கள் புறம் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கின்றன (Chidambaranar Samy, 2008). பாடலின் அடிவரையறையினை அடிப்படையாகக் கொண்டால், பெயரறியப்படாத புலவர்கள் நெடும்பாடல்களைப் பாடவில்லை என்பதனை அவர்களின் படைப்புகள் மூலம் புலப்படுத்துகின்றன.

## பண்பாடு

மனித மனத்தைப் பண்படுத்துவது பண்பாடு. தீய வழியில் செல்லும் மனதை நல்வழிப்படுத்த மனிதன் தனக்கென சில சமுதாயக் கட்டுப்பாடுகளை உருவாக்கினான். ஆணுக்கென்று சில வரையறைகளையும், பெண்ணுக்கென்று சில கட்டுப்பாடுகளையும் வகுத்தான். அக்கட்டுப்பாடுடைய சமுதாய அமைப்பே சங்ககால சமூகமாகும். மரபறிந்து ஒழுகுதலைப் பண்பாடு என்கிறது கலித்தொகை.

"'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்" (Viswanathan, 2004)

பண்புடையவர்களால் இவ்வுலகம் நிலைபெற்றுள்ளது என்பதை

"பண்புடையார் பட்டுண்டுலகம் அதுவின்றேல்

மண்புக்கு மாய்வது மன்"

என்கிறார் வள்ளுவர் (Parimelalhagar, 2022).

"ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும் (இரா. சுதமதி,2007) என்பர் மாத்யூ அர்னால்டு.

பண்டைய சமுதாய மக்களிடம் சிறந்த சமுதாய வாழ்வு, விருந்தோம்பல் சிறப்பு, உயர்ந்த ஒழுக்கம், உறுதியான கொள்கை, தன்னலமற்ற தியாகம், தலைநிமிர்ந்த தன்மான வீரவாழ்வு போன்றன இருந்ததை பெயரறியப்படாத புலவர்களின் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

## நாகரிகம்

மனித வாழ்வின் படிப்படியான வளர்ச்சி நாகரிகமாகிறது. மருத நிலமே நாகரிக வளர்ச்சியின் அடித்தளமாகும். திருக்குறளில் நாகரிகம் என்பது கண்ணோட்டம் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. கண்ணோட்டம் என்பது இரக்கமுடைமை, அன்பின் மிகுதியால் தோன்றும் இரக்கம், தாட்சண்யம், கருணையாகும். தமிழர்கள் தமக்கு நட்பாக உள்ளவர்கள் தமது உணவிலே நஞ்சு கலந்து கொடுப்பினும் அதை மறுக்காது உண்ணும் நாகரிகம் உடையவராயிருந்தனர்.

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்"

என்னும் நற்றிணைப் பாடலடிகள் வலியுறுத்துகின்றன (Ramasubramaniam, 2009). இதனையே

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க

நாகரிகம் வேண்டு பவர்"

என்கிறார் வள்ளுவர் (Parimelalhagar, 2002). நாகரிகமுடையவர்களிடம் நட்பு பாராட்டுதல், இரக்கங்காட்டுதல், பொறுமை காட்டுதல், அன்பு செய்தல், குற்றங்களைப் பொறுத்தருளுதல் போன்ற நற்பண்புகள் நிறைந்திருக்கும். எனவேதான் நட்புடையவர்கள் நஞ்சினைக் கொடுப்பினும் அதனை மனமுவந்து ஏற்றுக் கொண்டனர். தமிழர்களின் அன்பு பாராட்டும் மனநிலையை சங்க இலக்கியம் தெளிவுபடுத்துகின்றது. கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடியான தமிழ் குடிமக்களின் வாழ்வியல் நாகரிகம் உடையதாக விளங்கியதை கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கின்றன.

## இல்லறம்

இல்லற வாழ்வில் அறவோர்க்களித்தலும், அந்தணர் ஓம்பலும், விருந்து எதிர்கோடலும் தலைமக்களின் கடமை. முன்னோர் பொருளைக் காக்க வேண்டியதாலும் தலைவன் பொருள்வயிற்

பிரிகின்றான். தலைவன் வினைமுற்றி மீளும் காலம் வரை ஆற்றியிருத்தல் தலைவியின் பண்பாகும். கணவன் பிரிவினால் உள்ளத்தில் கவலைத் தோன்றுவது இயற்கை. அக்கவலையை வெளியில் காட்டாமல் மறைத்துக் கொள்ளுதலே கற்பின் மாண்பாகும். தலைவியின் காதலால் கட்டுண்ட தலைவன் இல்லின்கண் இருப்பின் வாழ்க்கை பயனற்றதாகிவிடும். பொருளீட்டுவது அவன் கடமையாகும்

“வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்” (Nagarajan, 2004)

என்பதற்கிணங்க வினை செய்தல் ஆடவர்க்கு உயிர் என்பதனை உணர்ந்து தலைவனைப் பொருள் தேட அனுப்பிய தோழி தலைவியிடம்

“உலகு வகுத்த உயர்வுறு காலைச்

சென்றனர் ஆயினும் நன்று செய்தனர்”

மனையுறை மகளிர் ஆடவரைத் தன் உயிரெனப் போற்றினர் (Ramasubramaniam, 2009). கணவனுக்காக உயிரையும் கொடுக்கும் கற்புடைய மகளிர் வாழ்ந்ததை சங்கப்பாடல் எடுத்துரைக்கின்றது.

“கலம் செய் கோவே! கலம் செய் கோவே!

அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய

சிறு வெண் பல்லி போல, தன்னொடு

சுரம் பல வந்த எமக்கும் அருளி”

என்னும் பாடலடிகள் கணவனுக்காகத் தன் உயிரையும் கொடுக்கும் கற்பின் திறத்தை இப்பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன (Swaminatha Iyer, 1984).

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் தமிழர்களின் தலைசிறந்த பண்பாடாகும். தன் வீட்டில் விதைப்பதற்காக வைத்திருந்த வரகையும், தினையையும் சமைத்து விருந்தினரை உபசரித்த நிலைமையை புறநானூறு விளக்குகின்றது.

“தொள்ளை மன்றத்து ஆங்கண் படரின்

உண்க’ என உணரா உயவிற்று ஆயினும்

தங்கினர் சென்மோ, புலவிர்! நன்றும்

சென்றதற் கொண்டு, மனையோள் விரும்பி

வரகும் தினையும் உள்ளவை எல்லாம்

இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென”

இவ்விருந்தோம்பல் சிறப்பு இளையான்குடிமாற நாயனாரின் விருந்தோம்பலை நினைவூட்டுகிறது (Swaminatha Iyer, 1984).

சீறூர் மன்னர்கள் தங்களை நாடிவரும் இரவலர்களுக்கும், பாணர்களுக்கும் உண்ண உணவினையும், பரிசுப் பொருட்களையும் கொடுத்து விருந்தோம்பினர்.

“வெள்ளத்திடும் பாலுள் உறை தொட

களவும் புளி அன்ன விளை

வாடு ஊன் கொழுங்குறை

கொய்குரல் அரிசியொடு நெய்பெய்து அட்டு,

துடுப்பொடு சிவணிய களிக்கொள் வெண்சோறு

உண்டு இனிது இருந்த பின்"

இப்பாடலடிகள் தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டினை எடுத்துரைக்கின்றது (Swaminatha Iyer, 1984).

## ஈகை

"ஈதல் இசைபட வாழ்தல்"

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்குப் பண்டைத்தமிழர்கள் சான்றாக விளங்கினர் (Parimelalhagar, 2002). செல்வத்துப் பயனே ஈதல் என வறியவர்களுக்குக் கொடுத்து இன்புற்று வாழ்ந்தனர்.

"உள்ளியது சுரக்கும் ஓம்பா ஈகை"

தலைவன் தன்னை நாடி வரும் இரவலர்கள் எப்பொருளைக் கருதினும் அப்பொருளை வழங்கும் ஈகைப்பண்புடையவன் என விளக்குகின்றது (Swaminatha Iyer, 1984). போரில் ஈட்டிய செல்வத்தை அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கும் தன்மையுடைய தலைவனை நாடு பெற்றிருந்தது.

"மிகப் பலவாயினும், என ஆம் - எனைத்தும்

வெண் கோள் தோன்றாக் குழிசியொடு

நாள் உறை மத்து ஒலி கேளாதோனே?"

என்னும் பாடலடிகள் தலைவன் தன் வீரர்களுக்கு போரில் மீட்ட ஆநிரைகளை விண்ணில் விண்மீன் தோன்றும் முன்னும், தயிரின் மத்து ஒலி கேட்கும் முன்னும் விரைவாக தானம் கொடுத்த செய்தியை வெளிப்படுத்துகிறது (Swaminatha Iyer, 1984).

## தமிழரின் வீரம்

வீரம் ஒன்றே ஆணின் உடைமையாகும். வாளேந்தி பகைவரை அழித்தலும், வில்லேந்தி நாட்டைக் காத்தலும், போரில் வெற்றி பெறுவதும் சிறந்த வீரமாகக் கருதினர். வில்லேந்திய ஆண்மகனின் வீரத்தினையும், தோற்றத்தினையும் புறநானூறு எடுத்துரைக்கின்றது.

"செருப்பு இடைச் சிறு பரல் அன்னன் கணைக்கால்

அல் வயிற்று, அகன்ற மார்பின், பைங் கண்,

குச்சின் நிரைத்த குரூஉ மயிர் மோவாய்,

சேவி இறந்து தாழ்தரும் கவுளன், வில்லோடு"

வில் வீரனான அவன் பகைவர்க்குத் துன்பம் செய்வதில் செருப்பணிந்த காலின் இடையே சிக்கியப் பரற்கற்களைப் போன்றவன். பகைவர்களும் அஞ்சும் தோற்றம் கொண்ட இவன் போரில் பகைவர்களின் அம்புகளைத் தன் மார்பிலே ஏற்று உயிர் நீத்தான் (Swaminatha Iyer, 1984).

"கல்லா இளையர் நீங்க நீங்கான்,

வில் உமிழ் கடுங் கணை மூழ்க

கொல் புனல் சிறையின் விலங்கியோன் கல்லே"

போர்த் தொழிலையே விரும்பும் வீரன் தான் ஒருவனே எதிர்நின்று பகைவர்களின் அம்புகளைத் தன் மார்பிலே ஏற்று உயிர்நீத்த பெருமையை இப்புறநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றது. போரில் விழுப்புண் பட்டு மாய்தல் தமிழரின் வீரச்சிறப்பாகும்.

## பொருள் தேடும் வாழ்க்கை

மக்களின் பொருளாதார வாழ்க்கை நில அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. நிலத்திற்கேற்ப தொழில் செய்து வாழ்வை வளப்படுத்திக் கொண்டனர். ஈட்டிய பொருளை அறத்திற்காகச் செலவிட்டனர். குறிஞ்சி, முல்லை, மருத நிலங்களில் வரகு, தினைகளைப் பயிர் செய்தனர். விளைந்த தினையை எருதுகளின் காலில் இட்டு மிதிக்கச் செய்தனர். இளைஞர்கள் தினை அடித்துத்தூற்றுவர்.

“எருதுகால் உறாஅது இளைஞர் கொன்ற

சில்விளை வரகின் புல்லென் குப்பை”

கடலில் சென்று மீன்பிடித்து வாழ்தல் நெய்தல் நில வாழ்க்கையாகும்.

“அத்த இருப்பைப் பூவின் அன்ன

துய்த் தலை இறவொடு தொகை மீன் பெறீஇயர்,

வரிவலைப் பரதவர்”

“நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி,

இனப்புள் ஓம்பும் எமக்கு நலன் எவனோ?

புலவு நாறுதும் செல நின்றீமோ!

பெருநீர் விளையுள் எம் சிறுநல் வாழ்க்கை”

பாலை நிலத்தின் தன்மைக்கேற்ப அம்மக்களும் கொடுமையான வேட்டைத் தொழிலைச் செய்து வந்தனர். விலங்குகளை மட்டுமின்றி மனிதர்களையும் வேட்டையாடினர் (Ramasubramaniam, 2009).

“செங்கோல் வாளிக் கொடுவில் ஆடவர்

வம்ப மாக்கள் உயிர்த் திறம் பெயர்த்தென

வெங்கடற்று அடைமுதல் படுமுடை தழீஇ”

நில அமைப்பு, நிலத்தின் தன்மை இவற்றிற்கேற்ப இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையை சங்க காலத்தில் காண முடிகிறது (Ramasubramaniam, 2009).

## நம்பிக்கைகள்

இயற்கையுடன் இணைந்த மனித வாழ்வில் நம்பிக்கைகள் தோன்றின. நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை உருவாக்குகின்றன. “வெவ்வேறு நாகரிகங்களில் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் அவற்றின் சடங்குகளில் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இது சடங்கு பற்றிய ஆய்வுக்கு ஆழமான வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தை அளிக்கின்றது” என நரேந்திர பட்டாச்சாரியா குறிப்பிடுகின்றார் (Sakthivel, 2007).

மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கின்றது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன. “மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவைதாம் பண்பாடாக மலர்கின்றன” என மானிடவியல் பேரறிஞர் டெய்லர் குறிப்பிடுகின்றார் (Sakthivel, 2007). சங்ககாலம் முதல் தற்காலம் வரை இந்நம்பிக்கைகள் இன்றும் நிலைபெற்று வருகின்றன. சங்ககால

மக்களிடம் விரிச்சி கேட்டல், புள்நிமித்தம் பார்த்தல், பல்லி சகுணம் கேட்டல் போன்ற நம்பிக்கைகள் காணப்பட்டன.

வினைமேற் சென்ற தலைவன் விரைவில் வருகின்ற செய்தியை புள்ளினங்கள் கரைந்து தலைவி அறியும்படியாகத் தெரிவித்தன. அதனால் தலைவி மகிழ்ந்திருப்பாள் எனத் தலைவன் தேர்பாகனிடம் கூறுகின்றான்.

"தோள் வலி யாப்ப ஈண்டு நம் வரவினைப்

புள் அறிவுறீஇயினகொல்லோ தெளளிதின்"

வினைமுற்றி மீளும் தலைவனது வருகையை மாளிகையில் உள்ள பல்லி ஒலியெழுப்பி அறிவித்த செய்தியை இப்பாடலடிகள் உணர்த்துகின்றன (Ramasubramaniam, 2009).

"முன்னியது முடித்தனம்ஆயின், நன்னுதல்!

வருவம் என்னும் பருவரல் தீரப்

படும்கொல், வாழி, நெடுஞ் சுவர்ப் பல்லி!"

"பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன"

பல்வேறு நன்னிமித்தங்களையும், நற்சொல்லையும் விரிச்சியாகக் கேட்டு மகிழ்ந்த தலைவியின் உளநிலையை அறிய முடிகின்றது (Viswanathan, 2004).

"அமிழ்தம் உண்க - நம் அயல் இலாட்டி,

பால் கலப்பன்ன தேக்கொக்கு அருந்துபு"

மனிதன் இறந்தபின் அவனைத் தெய்வமாக வழிபடுவது தமிழர் வழக்கமாகும் (Nagarajan, 2004). இறந்தோர்க்குக் கல் நடுகின்ற மரபு வளர்ந்து நடுகல் வழிபாடாகவும், வீரக்கல் வழிபாடாகவும் வளர்ந்தன. நடுகற்களுக்கு மயிற்பீலி சூட்டியும், கள்ளினை படைத்தும் வழிபட்டனர். ஔவை அதியமான் இறப்பினை எண்ணிப் பாடிய பாடலை நினைவூட்டுகிறது.

"நடுகல் பீலி சூட்டி, நார் அரி

சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ".

## முடிவுரை

எட்டுத்தொகையில் 83 பாடல்கள் பெயரறியப்படாத புலவர்களின் பாடலாகும். எட்டுத்தொகையில் மட்டுமே இப்பாடல்கள் காணப்படுகின்றன. புறநானூற்றில் மூன்று பாடல்கள் சிதைந்து காணப்படுகின்றன. தன்னலம் போற்றாது பிறர் நலம் போற்றும் பண்பாடு உடையவர்களாக மக்கள் வாழ்ந்தனர் என்பதை பெயரறியப்படாத புலவர்களின் பாடல்கள் உணர்த்துகின்றன. விருந்தோம்பல் தலையாய பண்பாகப் போற்றப்பட்பது. நிலத்திற்கேற்ற தொழில் செய்து தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொண்டனர். ஈகைப் பண்பில் சிறந்து விளங்கினர். மக்களிடம் விரிச்சி கேட்டல், புள்நிமித்தம், பல்லி சகுணம் பார்த்தல் போன்ற நம்பிக்கைகள் காணப்பட்டன. மறவர்களின் வீரத்தினைப் போற்றும் வகையில் நடுகல் அமைத்து வழிபடும் வழக்கம் காணப்பட்டது. தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பை அறிய பெயரறியப்படாத புலவர்களின் பாடல்கள் சான்றாக அமைகின்றன.

## References

Aravanan, K, P., (2003) Tamilar Ilakkiya samooga thalangal, Tamil kottam, Chennai, India.

Chidambaranar Samy., (2008) Ettuthogaiyum tamilar panpadum, Arivu publications, Chennai, India.

Ramakrishnan, A., (2010) Tamilaga varalarum panpaadum, sarvodheya Ilakkiyap pannai, Madurai, India.

Sakthivel, S., (2007) Naattuppura eyal aaivu, Manivasagar publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License